

நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் பெரியாரிய, மார்க்ஸிய, அம்பேத்கரிய ஆய்வறிஞர் தோழர்.எஸ்.வி.இராஜதுரை அவர்களை முன்னாள் ஒன்றிய அமைச்சர், கழக துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. மரியாதை நிமித்தம் சந்தித்தார். அப்போது சமீபத்தில் பெரியார் குறித்து தோழர்.எஸ்.வி.ஆர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த புத்தகம் குறித்து இருவரும் கலந்துரையாடினர். அதுபோது அரசுக் கொறடா கா.இராமச்சந்திரன் உள்ளார்.

## நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம்!

## மாவட்ட பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி – இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

நாமக்கல். செப். 23-

நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக சார்பில் பரமத்தி வேலூர் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம் பரமத்தி வேலூர் அண்ணா சிலை அருகில் நடைபெற உள்ளது. நாமக்கல் மேற்கு மாவட்ட கழக பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி தலைமை தாங்கினார். வேலூர் பேரூர் கழக செயலாளர் பி.முருகன் வரவேற்றார்.

மாவட்டக் கழக நிர்வாகிகள் நடனசபாபதி, அன்பழகன், மயில்சாமி, சாந்தி, ராஜாராம், ஜிஜேந்திரன், செல்வராஜ், ரங்கசாமி, வெங்கடாஜலம், திருநாவுக்கரசு, சோமசேகர், சிவக்குமார், வேலுமணி, ரவிச்சந்திரன், இந்திராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி, சட்டமன்ற உறுப்பினரும், மாநில வழக்கறிஞர் அணி இணை செயலாளருமான இ. பரந்தாமன் சிறப்புரையாற்றி, ஓரணியில் தமிழ்நாடு தீர்மான உறுதிமொழியை வாசிக்க கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.

இக்கூட்டத்தில் கழக சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் ஜே கே கே எஸ் மாணிக்கம், மாநில விவசாய அணி துணை செயலாளர் வெப்படை செல்வராஜ், பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் உமாராணி, மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் ரியா, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பரமானந்தம்,

ஒன்றிய செயலாளர்கள் தனராசு, சாமிநாதன், சரவணகுமார், சுப்பிரமணியம், தங்கவேல், சண்முகம், வட்டூர் தங்கவேல், தாமரைச் செல்வன், பழனிவேல், செல்வராசு, இளங்கோவன், செல்வம், நாச்சிமுத்து, நகர செயலாளர்கள் குமார், கார்த்திகேயன், நடேசன், ஞானசேகரன், விஜய் கண்ணன்

பேரூர் கழகச் செயலாளர்கள் திருமலை, ரமேஷ் பாபு, கருணாநிதி, பெருமாள் (எ, முருகவேல், சூர்யா இராமலிங்கம், கார்த்திக் ராஜ், ராமமூர்த்தி மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மகில் பிரபாகரன் நன்றி கூறினார்.



தமிழ்நாடு முதலமைச்சர், தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்ட முகாம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை கிழக்கு ஒன்றியம் நீர்பழனியில் நடைபெற்ற முகாமினை மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தொடங்கி வைத்து, பார்வையிட்டு கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துப் பெட்டங்களை வழங்கினார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் மு.பி.ம.சத்தியசீலன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மு.பி.மணி, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் டி.செல்வம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் வருவாய் கோட்டாட்சியர், புதுக்கோட்டை மாவட்ட சுகாதார அலுவலர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று பயனடைந்தனர். முகாமில் பங்கேற்ற பொதுமக்களுக்கு விராலிமலை கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் 2000 பேருக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ. வாசுதேவன்

### செப்டம்பர் 23 (2023)



இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

செவ்வாய்ப்பேட்டை கிளை செயலாளராகவும், அவைத்தலைவராக பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறவழிப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## இடைக்கழிநாடு பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்!

செங்கல்பட்டு, செப். 23 -

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் அடுத்த இடைக்கழி நாடு பேரூராட்சியில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகம் மாவட்ட கலெக்டர் சினேகா தலைமையில் நடைபெற்றது

இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. எ. செல்வம் எம்.பி., மு. பாபு எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்தி ட்ட உதவிகளை வழங்கினர்.

இதில் பேரூராட்சி தலைவர் சம்யுக்தா அய்யனார், பேரூர் செயலாளர் மோகன்தாஸ், அவைத்தலைவர் இனியரசு, துணைச் செயலாளர் ரஞ்சித், மாண வரணி மாவட்ட துணை அமைப்பாளர் சரண் ராஜ், சமூக ஆர்வலர் அய்யனார் உள்ளிட்ட ஏராளமான திமுக கட்சி நிர்வாகிகளும் கிளைக் கழக செயலா ளர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.



கோவை தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில், கோவை கருமத்தம்பட்டி கலைஞர் திடலில், மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் கருமத்தம்பட்டி நகரச் செயலாளர் நித்யா க.மனோகரன் வரவேற்புரையில் தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க “ஓரணியில் தமிழ்நாடு” தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், தலைமை கழக பேச்சாளர் சரவணன் மணிவேல் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி உள்பட தலைமைக் கழக, மாவட்ட கழக, நகர கழக நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமையில் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன் முன்னிலையில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன். ‘ஓரணியில் தமிழ்நாடு’ எனும் தலைப்பில் அனைவரும் தீர்மானம் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். அருகில் எம்.எல்.ஏ.க்கள் சௌந்தரபாண்டியன், பழனியாண்டி, முன்னாள் எம்.எல்.ஏ அன்பில் பெரியசாமி , நாகராஜ் சுப்பிரமணி ராமலிங்கம்மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப, கோவை வடக்கு மாவட்டம் சார்பில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மானம் ஏற்பு பொதுக்கூட்டம் மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி தலைமையில் துடியலூரில் மிகப் பிரமாண்டமாக நடைபெற்றது. பொதுமக்கள், கழக உடன்பிறப்புகள் கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள், மகளிர் அணியினர் பெருந்திரளாக கலந்து கொண்ட இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி உறுதி மொழியை படிக்க அனைவரும் எழுந்து நின்று உறுதிமொழி ஏற்றனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்’ தீர்மான ஏற்பு கூட்டம் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் புதுக்கோட்டை துணை மேயரும் வடக்கு மாநகர பொறுப்பாளருமான எம்.லியாகத் அலி வரவேற்பில் புதுக்கோட்டை அண்ணா சிலை அருகில் நடைபெற்றது. தலைமைக் கழக பேச்சாளர் சைதை சாதிக் சிறப்புரையாற்றினார். முன்னதாக அனைவரும் எழுந்து நின்று கை உயர்த்தி “தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்” என உறுதிமொழி எடுத்து கொண்டனர். நிகழ்வில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான், கந்தர்வக்கோட்டை தொகுதி பொறுப்பாளர் மணவளவன், த.சந்திரசேகரன், அரு.வீரமணி, கே.ஆர்.என்.போஸ், க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, க.மதியழகன், சுப.சரவணன், கீரை. தமிழ் ராஜா, சு.சண்முகம், தென்னலூர் எம்.பழனியப்பன், என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், ஆர்.செல்லத்துரை, கே.எஸ்.சந்திரன், தவ.பாஞ்சாலன், மு.க.ராமகிருஷ்ணன், எம்.பரமசிவம், மற்றும் கழக உடன்பிறப்புகள். பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக தமிழ்நாட்டைதலை குனிய விடமாட்டேன் தீர்மான ஏற்பு பிரமாண்டமான பொதுக் கூட்டத்திற்கு ஊத்தங்கரை வடக்கு ஒன்றிய செயலாளர் குமரேசன் வரவேற்புரையாற்றினார். கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி சிறப்புரையாற்றி உறுதிமொழி ஏற்றனர். கூட்டத்தில் சூர்யா கிருஷ்ணமூர்த்தி , நாகராஜ், ரமேஷ், தேவகுமார், மாலதி நாராயணசாமி, கோவிந்தசாமி, சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி, கதிரவன், அமானுல்லா , பார்த்திபன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.